**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.74/2016

நாள் 14.08.2023.

பெயர். பழனி த/பெ. பச்சையப்பிள்ளை

வா.சா.3 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. வாதி கோயில் கட்டிவிட்ட பிறகு தான் அறக்கட்டளை ஆரம்பித்தோம் என்றால் சரிதான். வாதி கோயில் கட்டிவிட்டு ஒரு ஆண்டுக்கு பிறகு அறக்கட்டளை ஆரம்பித்தோம். நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல நானும் அறக்கட்டளையில் ஒரு அங்கத்தினர் தான் நான் கோயில் தருமகத்தா ஆகும்.

2. வாதி கோயில் கட்டுவதற்காக வரவு செலவு கணக்கு யார் பராமரித்து வந்தார் என்றால் பாஸ்கரன் தான் பராமரித்து வந்தார். வரவு செலவு கணக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வாதி கோயில் அறக்கட்டளை நிர்வாகத்திற்கு கீழ் இயங்கி வருகிறது என விளம்புகை செய்ய வேண்டும் என்று வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. அரசிடமிருந்து அறக்கட்டளை பெயரில் ஒப்புதல் கடிதம் ஏதேனும் பெற்றுள்ளோமா என்றால் பெற்றுள்ளோம். மேற்படி அரசிடமிருந்து பெற்ற ஒப்புதல் கடிதத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். மின்சார வாரியத்திற்கு ஈட்டு உறுதி பத்திரம் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4. தினமும் கோயிலுக்கு செலவாகும் வரவு செலவு கணக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு வரவு செலவு கணக்குகளில் கோவிலுக்கு நன்கொடை அளித்தவர்களின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் சில பெயர்கள் தெரியும் சில பெயர்கள் தெரியாது. எந்தந்த வகையில் நன்கொடை அளித்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5. கோயில் கட்டப்பட்டுள்ள இடம் யார் நன்கொடையாக அளித்தார்கள் என்றால் சிவனாந்தனின் தம்பி தான் இடம் கொடுத்தார் அவருடைய பெயர் தற்போது ஞாபகம் வரவில்லை. எந்த வகையில் மேற்படி இடத்தை கோயிலுக்காக கொடுத்தார் என்பது தெரியுமா என்றால் தெரியும் கிரயம் கொடுத்தார். யார் பெயருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் கோவில் பெயருக்கும் மற்றும்

ப.பழனி

Scanned with OKEN Scanner

அறக்கட்டளை பெயருக்கும் கொடுத்தார். எங்கள் அறக்கட்டளை பெயருக்கு இடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எங்கள் அறக்கட்டளைக்கு கொடுத்ததாக சொல்லும் அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6. கோயிலுக்கு தனியாக வருமானம் ஏதேனும் வருகிறதா என்றால் வருமானம் எதுவும் வரவில்லை ஒரு இடம் மட்டும் கோயில் பெயரில் கிரயம் வாங்கி வைத்துள்ளோம். நன்கொடை வாங்கி தான் கோயிலுக்கு செலவு செய்து வருகிறோம். கோயிலில் பணியாற்றும் நபர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது பாஸ்கரனுக்கு தான் தெரியும்.

7. கோயில் பூஜை செய்யும் ஐயர் விவரம் தெரியுமா என்றால் ஆரணியிலிருந்து ஒரு நபர் தினமும் பூஜை செய்கிறார் எனக்கு அவர் பெயர் தெரியாது. மின்சார ரசீதுகள் யார் பெயரில் வருகிறது தெரியுமா என்றால் என் பெயரில் பி. பழனி என்று வருகிறது. உயர்நீதிமன்றத்தில் எந்த காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்று தெரியுமா என்றால் தெரியும் கோவிலில் சீட்டு நடத்துவது தடை செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருந்தோம். மேற்படி வழக்கு சம்மந்தமாக வட்டாட்சியர் விசாரித்து என்ன கூறினார் என்று எனக்கு தெரியுமா என்றால் எல்லோரும் கலந்து செய்யுங்கள் என்று கூறினார் ஆனால் அவர்கள் கலந்து செய்யவில்லை.

8. மேற்படி உத்தரவிற்கு பிறகு பிரதிவாதிகள் தான் தொடர்ந்து பூஜை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். யார்யாரிடமிருந்து வந்த நன்கொடையின் மூலமாக நாகப்பனிடமிருந்து கிரயம் வாங்கினோம் என்று எனக்கு தெரியுமா என்றால் சுமார் 20 நபர்களிடமிருந்தும் மற்றும் நாங்கள் சிறிது நன்கொடை வாங்கியும் மேற்படி சொத்தை கிரயம் வாங்கினோம் அவர்கள் பெயர் தற்போது ஞாபகமில்லை. மேற்படி கிரயம் வாங்கப்பட்ட இடம் எங்கள் ஐந்து பேர் உள்ள அறக்கட்டளையின் பெயரில் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான்.

9. எங்கள் அறக்கட்டளையின் கீழ் வாதி கோவில் இல்லை என்றால் சரியல்ல. பாஸ்கரன் ரியல்எஸ்டேட் தொழில் செய்துவருகிறார். பிரதிவாதிகள் சீட்டு நடத்துவதாக பொய்யான சங்கதிகளைக் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பாஸ்கரன் தான் சீட்டு நடத்தி பைனான்ஸ் தொழில் கோயிலில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நிர்வாகத்தை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் விசாரித்து பிரதிவாதிகளிடம் தான் கோவில் நிர்வாகத்தை ஒப்படைந்தார் என்றால் சரியல்ல.

P. பழனி

Scanned with OKEN Scanner

அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தில் பிரதிவாதிகள் தான் நிர்வாகத்தை கவனிக்க வேண்டும் என்றும் நாங்கள் எந்தவித தொந்தரவும் செய்யக்கூடாது என்றும் கூறிவிட்டார் என்றால் சரியல்ல. வாதி கோவிலுக்கு யார் வேண்டுமானாலும் பூஜை மற்றும் திருவிழா செய்யலாம் என்றால் சரிதான்.

10. அவ்வாறு செய்யபட்ட திருவிழா அழைப்பிதழ் தான் நாங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் அதை யார் வேண்டுமானலும் தாக்கல் செய்யலாம் என்றால் சரியல்ல. வாதி கோயில் எங்கள் அறக்கட்டளையின் கீழ் நிர்வாகம் செய்யப்படுகிறது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சட்டபடி நிலைக்கதக்கது இல்லை என்றால் சரியல்ல.

P.V. [signature]

Taken Down before by me in open court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

P.T. [signature]
14.08.23

District Munsif
Arni.

Scanned with OKEN Scanner